2013 மே 10]

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தைப் பொறுத்தவரை, தருமபுரி, கிருஷ்ணகிரி ஆகிய இரண்டு மாவட்டங்களிலும் உள்ள அனைத்துக் குடியிருப்புகளுக்கும் ஒகேனக்கல் குடிநீர்த் திட்டம் அமல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. அது முடிவுறுகிற நிலையில் இருக்கிறது.*

முற்பகல் 10—20

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கிராமத்தைக் குறிப்பிட்டு, அந்த கிராமத்திற்குக் காவேரி நீர் வரவில்லை என்று சொல்கிறார். முதலில் அது ஆய்வு செய்யப்படும். ஆய்வு செய்த பிறகு, அந்தக் கிராமத்திற்குக் குடிதண்ணீர் வரவில்லை என்று சொன்னால், அதன்மீது நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யப்படும் என்று கூறிக்கொள்வதோடு, மாண்புமிகு உறுப்பினர் கூறிய அந்தக் கிராமத்தில் மேல்நிலைத் நீர்த்தேக்கத் தொட்டி தேவைப்படுகின்ற பட்சத்தில், அதை நிறைவேற்றுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 457, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

457—

குளிர்பதனக் கிடங்கு

***7690—திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொள்ளாச்சி பகுதியில் காய்கறிகளுக்கென குளிர்பதனக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) பொள்ளாச்சியிலிருந்து 18 கி.மீ. தொலைவில் உள்ள கிணத்துக்கடவில் ரூ.2.25 கோடி மதிப்பீட்டில் காய், கனிகளுக்காக 500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதனக் கிடங்கு அமைக்கும் பணி தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் தற்போது நடைபெற்று வருகிறது. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் பொள்ளாச்சியில் காய்கறிகளுக்காக குளிர்பதனக் கிடங்கு எந்தப் பகுதியில் அமைக்க வேண்டும் என்று தெரிவித்தால், தேவையின் அடிப்படையில் மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, நடப்பாண்டில் அமைக்க ஆவன செய்யப்படும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி அவர்கள்.*

திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்தில் மாணவ, மாணவியருக்கு மடிக் கணினி தந்து நானிலத்திற்கு நல்வழிகாட்டியானார் நமது மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கல்வி ஒன்றே சமுதாய வேறுபாடுகளை வேரோடும், வேரடி மண்ணோடும் களைந்தெறியும் ஒரே கருவி என்பதைக் கருத்தில்கொண்டு, பார்போற்றும் பல்வேறு திட்டங்களைத் தந்து, ஒரு புதிய உலகத்திற்கு தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்லும் மாண்புமிகு அம்மா அவர்களின், நாளை நாற்பதையும் வென்று, பாரதத்தை ஆண்டு, வல்லரசாக மாற்றும் நல்லரசு (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் பாத மலர் பணிந்து வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொள்ளாச்சி பகுதியில் சுமார் 2,800 ஹெக்டேர் பரப்பளவில் ஏறக்குறைய 50,000 மெட்ரிக் டன் காய்கறிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதனை அப்பகுதி விவசாயிகள் பொள்ளாச்சி நகர்ப் பகுதியில் அமைந்துள்ள காந்தி காய்கறி சந்தைக்குக் கொண்டு சென்று, விற்றுச் செல்கிறார்கள். சில நேரங்களில் உற்பத்தி அதிகமாகி விலை வீழ்ச்சி அடையும். அப்போது திரும்பக் கொண்டு சென்றால், கெட்டுவிடும் என்பதால், காய்கறிகளை ரோட்டிலேயே கொட்டிவிட்டுச் செல்கின்றனர். அதைப் பறித்தால் நஷ்டம் ஏற்படும்

2013 மே 10]

என்பதைக் கருத்தில்கொண்டு, சிலர் அப்படியே தோட்டத்திலேயே விட்டுவிடுகின்றனர். இந்த நிலையை மாற்ற, பொள்ளாச்சிக்கு அதிகமான காய்கறி வரத்து இருப்பதாலும், பொள்ளாச்சி நகராட்சிப் பகுதியில் குளிர்பதனக் கிடங்கு அமைக்கத் தேவையான இடத்தை வழங்க பொள்ளாச்சி நகராட்சி தயாராக இருப்பதாலும், காந்தி வாரச் சந்தையில் 1,000 மெட்ரிக் டன் காய்கறிகளை வைக்க ஒரு குளிர்பதனக் கிடங்கை ஏற்படுத்தி, அதற்கு சூரிய ஒளியின்மூலம் மின்சாரத்தைப் பெற ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொள்ளாச்சி காந்தி மார்க்கெட் பகுதியில் தேவையான இடத்தினை வேளாண்மை விற்பனைத் துறைக்கு பொள்ளாச்சி நகராட்சி வழங்கும்பட்சத்தில், பயிரிடப்படும் காய்கறிகளின் பரப்பு மற்றும் உற்பத்தி அடிப்படையில் குளிர்பதனக் கிடங்கு அமைக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச்செல்லப்பட்டு, நிதி ஒதுக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். சூரிய ஒளியில் மின்சாரம் தயாரித்து, அந்தக் குளிர்பதனக் கிடங்கிற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்றும் கேட்டிருக்கிறார்கள். அதுவும் வருங்காலத்தில் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி அவர்கள்.

திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருள்சூழ்ந்த இந்தியாவின் ஒளிவிளக்காய் விளங்குகின்ற மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், குளிர்பதனக் கிடங்கு அமைத்துக்கொடுக்க ஆவன செய்யப்படும் என்றும், சூரிய ஒளியின்மூலம் மின்சாரம் வழங்க பரிசீலிக்கப்படும் என்றும் சொல்லிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியினைக் காணிக்கையாக்கி அமர்கிறேன்.